Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.107/2011

Deposition of witness for: PW - 9

| | | | |
|---|---|---|---|
| Name | : **பாலாஜி** | Father/Husband Name | : ராஜசேகரன் |
| Calling | : | Age | : |
| Date | : 06.07.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 06th day of 07.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரி ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1) நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்று மதுரையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 09.07.2009-ம் தேதி இரவு 22.30மணிக்கு பரமேஸ்வரி என்பவர் திரு.மாரிமுத்து சார்பு ஆய்வாளரிடம் கொடுத்த புகாரை பெற்று அவர் நிலைய குற்ற எண்.152/2009, இ.த.ச பிரிவு 379 ஆக வழக்கு பதிவு செய்து முதல்கட்ட விசாரணை முடித்து வைத்திருந்தார். அதன் பின்னர் கடந்த 30.12.2009-ம் தேதி குற்ற எண்.152/2009 சம்மந்தப்பட்ட எதிரியாக அறியப்பட்டவரை பரமேஸ்வரி என்பவரின் நகையை எதிரி திருடியதாகவும், திருடிய நகையை விற்க வந்தபோது பாக்கியா நகை கடையின் உரிமையாளர் கண்டறிந்து எதிரி பற்றிய தகவலை புகார்தாரருக்கும், அவரது உறவினர்களுக்கும் தகவல் சொன்னதன் பேரில் புகார்தாரர் மற்றும் ராஜ்குமார், ஹரிகிருஷ்ணன் ஆகியோர்கள் எதிரியை கீழவளவு காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தனர். அப்போது

நிலைய பொறுப்பில் இருந்த திருமதி.மாரீஸ்வரி அவர்கள் எதிரியை பெற்று, மாரீஸ்வரி எனக்கு தகவல் கொடுத்ததன் பேரில் நான் காவல்நிலையத்திற்கு சென்று, எதிரிக்கு எவ்வித ஆசை வார்த்தையோ, துன்புறுத்தலோ இல்லாமல் சாட்சிகள் ராஜ்குமார் மற்றும் ஹரிகிருஷ்ணன் முன்னிலையில் அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, தன்னை அழைத்து சென்றால் நான் சம்பவ இடத்தை அடையாளம் காட்டுவேன் என்று சொன்னார், மேற்படி நகை தான் புகார்தாரரிடமிருந்து திருடிய நகை என்று ஒப்புக்கொண்டார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து நகையை அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். **(அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (அந்த அத்தாட்சி அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எதிரியிடமிருந்து கைப்பற்றிய நகையை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். **(அந்த படிவம் 91 அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2) அதன்பின்னர் புகார்தாரர் பரமேஸ்வரியை மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் ஹரிகிருஷ்ணன், ராஜ்குமாரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி எதிரியை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். அதன்பின்னர் நான் பணிமாறுதலில் சென்றுவிட்டேன். வழக்கு கோப்புகளை எனக்கு பின்னர் வந்த காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) வழக்கு சம்பவம் நடந்த இடம் எது என்றால் கீழையூர். கீழையூரிலிருந்து கீழவளவிற்கு ஒரு கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரியல்ல, 4 கி.மீ இருக்கும். புகார்தாரர் புகார் மனுவில் நான் கோவிலுக்கு பிரசாதம் வாங்க

சென்றிருந்தேன், அப்போது நகை காணவில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நகை வீட்டிற்கு சென்ற பின்னர் தான் காணாமல் போன விபரம் தனக்கு தெரியவந்தது என்று புகார் மனுவில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு நகை காணவில்லை என்ற விபரம் தெரிந்துகொண்டனர் என்றால் நேரம் புகாரில் குறிப்பிடவில்லை. நான் மேலூர் வட்ட காவல் ஆய்வாளர், கீழவளவு காவல்நிலையத்திற்கும் நான் தான் ஆய்வாளர் என்றால் சரிதான். 30.12.2009–ம் தேதி நான் மேலூர் காவல்நிலைய காவல் ஆய்வாளராக அன்றைய தினம் பணியில் இருந்தேன் என்றால் சரிதான். பொதுவாக நகை கடைகளுக்கு அவசர நிலை என்றால் காவல்நிலையத்தை தொடர்பு கொள்ள தொலைபேசி எண் கொடுத்திருப்போம் என்றால் சரிதான். நகை கிடைத்ததாக சொல்லப்படும் இடம் மேலூர் காவல்நிலையத்திலிருந்து 1 கி.மீ தூரம் உள்ளது என்றால் சரிதான். மேலூர் நகை கடைகளில் இதுபோன்ற திருட்டு நகை குறித்து எதிரியை பிடித்ததாக எந்த தகவலும் எனக்கு வரவில்லை என்றால் சரிதான். எனக்கு எதிரியை பிடித்துக்கொண்டு வந்தது குறித்து கீழவளவு சார்பு ஆய்வாளர் தான் தகவல் சொன்னார் என்றால் சரிதான். யார் எதிரியை பிடித்தார், யார் உடன் வந்தார் என்ற விபரம் சார்பு ஆய்வாளர் எனக்கு சொன்னாரா என்றால் சொன்னார், பரமேஸ்வரி, ராஜ்குமார், ஹரிகிருஷ்ணன் மற்றும் அவரது உறவினர்கள் வந்ததாக சொன்னார். நகை கடைகாரர் அன்றைய தேதி அவர்களுடன் வரவில்லை என்றால் சரிதான் நான் வழக்கு பதிவு செய்த சார்பு ஆய்வாளர் மாரிமுத்தை அல்லது நகை கடைக்காரரை நான் விசாரித்தேனா என்றால் சார்பு ஆய்வாளர் மாரிமுத்து, மாரீஸ்வரியை நான் விசாரித்தேன். நீதிமன்ற அழைப்பாணையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான்.

நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாக சொல்லப்படும் மாரீஸ்வரி, மாரிமுத்து ஆகியோர்களை விசாரணை செய்து, நீதிமன்றத்தில் வாக்குமூலத்தை தாக்கல் செய்திருந்தால் அதில் என்னுடைய கையொப்பம் இருந்திருக்கும் என்றால் சரிதான். வழக்கு சொத்தை யாரிடமிருந்து கைப்பற்றினேன் என்றால் எதிரி ராணியிடமிருந்து நான் கைப்பற்றினேன். யாருடைய முன்னிலையில் வைத்து கைப்பற்றினேன் என்றால் ராஜ்குமார் மற்றும் ஹரிகிருஷ்ணன். புகார்தாரரின் மருமகன் மற்றும் மைத்துனர் முன்னிலையில் கைப்பற்றியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் வாக்குமூலம் எத்தனை மணிக்கு ஆரம்பித்து, எத்தனை மணிக்கு தயார் செய்து முடித்தேன் என்றால் 11.30 மணி முதல் 13.00 மணி வரை விசாரித்தேன். சுமார் 5 மாத காலத்திற்கு பின்னரே இவ்வழக்கு சொத்து கிடைக்கப்பட்டது என்றால் சரிதான். நான் இந்த வழக்கு சொத்தை பெற்ற பின்னர் நகை கடைக்காரரை அழைத்து விசாரித்தேனா என்றால் இல்லை, அவர் முன்வராததால் விசாரிக்கவில்லை. இந்த நகை அந்த கடையில் இருந்து தான் வாங்கப்பட்டது என்பதற்கு ஆதரவாக ரசீது பெற்றேனா என்றால் இல்லை. பொதுவாக திருட்டு வழக்குகளில் ஒப்புதல் வாக்குமூலங்களில் ஊர் தலையாரி, கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் பெறுவது வழக்கம் என்றால் சரிதான். ஆனால் இவ்வழக்கில் அவ்வாறு கிராம நிர்வாக அலுவலர் அல்லது தலையாரி முன்னிலையில் பெறவில்லை என்றால் தனிநபர் சாட்சிகள் முன்வராத சூழ்நிலையில் தான் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தலையாரி முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவோம், இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் இருந்ததால் அவர்கள் முன்னிலையில் பெறவில்லை. நான் வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன்,

நான் அழைத்தால் தலையாரி, கிராம நிர்வாக அலுவலர் வருவார் என்றால் சரியல்ல. என்னுடைய விசாரணையின்படி எதிரியை எத்தனை மணிக்கு காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள் என்றால் அது பற்றிய குறிப்புகள் கோப்பில் இல்லை. எத்தனை மணிக்கு எதிரியை கைது செய்தேன் என்றால் 11.30 மணிக்கு கைது செய்தேன். யாருடைய முன்னிலையில் எதிரியை கைது செய்தேன் என்றால் எதிரியின் உறவினர் மனோகரன் அவரது நண்பர் தீப்பொறி முருகன் ஆகியோர்களிடம் தகவல் சொல்லி அவர்கள் முன்னிலையில் கைது செய்தேன். அவ்வாறு கைது செய்தபோது எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்பட்டதாக கைது குறிப்பாணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2) நான் சொன்னது போல், எந்த சம்பவமும் எதிரி செய்ததாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை, நான் புள்ளியல் கணக்கிற்காக வீட்டில் இருந்த எதிரியை அழைத்து சென்று காவல்நிலையத்தில் வைத்து கைது செய்து, ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, எதிரியை இவ்வழக்கில் சேர்த்துள்ளேன், நான் உண்மையாக எதிரி திருடி இருந்தால் கிராம நிர்வாக அலுவலர், தலையாரி முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றிருப்பேன், அவர்கள் முன்னிலையில் வழக்கு சொத்தை கைப்பற்றியிருப்பேன், அவ்வாறு இல்லாததால் தான் புகார்தாரரின் உறவினர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, வழக்கு சொத்தை கைப்பற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த படிவம் 91–ல் எந்த சாட்சியும் கையொப்பம் செய்யவில்லை என்றால் பொதுவாக படிவம் 91–ல் சாட்சிகளிடம் கையொப்பம் பெறுவதில்லை, அத்தாட்சியில் மட்டும் கையொப்பம் வாங்குவது வழக்கம். இவ்வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தம் இல்லை, நான் தவறுதலாக

**எதிரியை கைது செய்ததாகவும், பொருளை கைப்பற்றியதாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**